Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

# மாகாணக் கல்வித் திணைக்களம், சபரகமுவ – வாராந்தப் பாடசாலை

தரம் : 6

பாடம் : கணிதம்

வாரம் : 2

**அலகு : - இடப்பெறுமானம் (முதலாம் வாரம்)**

**பாடவேளைகளின் எண்ணிக்கை : 06**

- ❖ பாடப்புத்தகத்தில் 9 , 10 ஆம் பக்கங்களை வாசித்து விளங்கிக் கொள்க.
- ❖ அதன் படி கீழே காட்டப்பட்டுள்ள எண்சட்டங்கள் வகைகுறிக்கும் பெறுமானங்களை எழுதுக.




- ❖ கீழே காட்டப்பட்டுள்ள எண்களை எண் சட்டங்கள் மூலம் வகைகுறிக்க.

1) 35 2) 403 3) 1374




- ❖ பாடப்புத்தகத்தில் 12 ஆம் பக்கத்திலுள்ள உதாரணம் 1 ஐச் சரியாக விளங்கிக் கொள்க.
- ❖ பாடப்புத்தகத்தில் பயிற்சி 2.1 ஐப் பூரணப்படுத்துக.
- ❖ பாடப்புத்தகத்தில் 13, 14, 15 ஆகிய பக்கங்களை வாசித்து விளங்கிக் கொள்க.

m/sir

| இடம் | இடப்பெறுமானம் |
|---|---|
| **ஓன்றினிடம்** | 1 |
| **பத்தினிடம்** | 10 |
| **நூறினிடம்** | 100 |
| **ஆயிரத்தின் இடம்** | 1000 |

❖ இலக்கம் 4 ஐக் கொண்ட எண் ஒன்றை எழுதுக. அவ்வெண்ணில் ஒவ்வொரு இலக்கத்தினாலும் காட்டப்படும் இடம், இடப்பெறுமானம், வகைகுறிக்கும் பெறுமானம் என்பவற்றை எழுதுக.

உதாரணம் :- 4 352

| இலக்கம் | இடம் | இடப்பெறுமானம் | வகைகுறிக்கும் பெறுமானம் |
|---|---|---|---|
| 2 | **ஓன்றினிடம்** | 1 | 2 |
| 5 | **பத்தினிடம்** | 10 | 50 |
| 3 | **நூறினிடம்** | 100 | 300 |
| 4 | **ஆயிரத்தின் இடம்** | 1000 | 4000 |

❖ இடப்பெறுமானத்தை இனங்கண்டு இடைவெளிகளை நிரப்புக.



❖ 7 432 எனும் எண்ணில்,

1) இலக்கம் 4 அமைந்துள்ள இடத்தின் பெயர் யாது?

2) இலக்கம் 4 அமைந்துள்ள இடத்தின் இடப்பெறுமானம் யாது?

3) இலக்கம் 4 இனால் வகைகுறிக்கும் பெறுமானம் யாது?

4) இலக்கம் 3 அமைந்துள்ள இடத்தின் பெயர் யாது?

5) இலக்கம் 7 அமைந்துள்ள இடத்தின் இடப்பெறுமானம் யாது?

6) இலக்கம் 2 இனால் வகைகுறிக்கும் பெறுமானம் யாது?

❖ பாடப்புத்தகத்தில் பயிற்சி 2.2 ஐப் பூரணப்படுத்துக.